செ.வெ.எண்: 43/மார்ச் நாள்: 26.03.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் பகுதிகளில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இராமேஸ்வரம் பகுதிகளில் இன்று (26.03.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு, பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதலாவதாக, இராமேஸ்வரம், மேலவாசல் பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்தார். சுற்றுலா பயணிகள், பொது மக்கள், நேரு யுவகேந்திரா தன்னார்வ தொண்டு நிறுவனத்தினை சார்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர். தொடர்ந்து, இராமேஸ்வரம், விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாணவ மாணவியர்கள் வாக்காளிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அணிவகுத்து நின்றனர். அதன்பின்பு, மாணவ மாணவியர்களுக்கு பெற்றோர்களிடமிருந்து கையொப்பம் பெறுவதற்கான வாக்காளர் உறுதிமொழி படிவத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும், இராமேஸ்வரம் இண்டேன் சமையல் எரிவாயு நிலையத்தில், சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016 வாக்குப்பதிவு நாளான "MAY-16" குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகைய வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் மாவட்டத்தில் இதுவரை, வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்திட 15,546 நபர்களிடமிருந்து படிவம் 6ம், 1974 நபர்களிடமிருந்து படிவம் 7-ம், 6130 நபர்களிடமிருந்து படிவம் 8-ம், 519 நபர்களிடமிருந்து படிவம் 8-Aம் ஆக மொத்தம் 24,169 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சிகளில், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (வருவாய் கோட்டாட்சியர்) திரு.ராம்பிரதீபன், இராமேஸ்வரம் நகராட்சி ஆணையாளர் திரு.ஜெயராம் ராஜ், வட்டாட்சியர் திருமதி.ரத்தினவள்ளி, விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திரு.சச்சிதானந்தம், உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**